**ஜனவரி – 04**

# TNPSC துளிகள்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவரான சிவன் விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் நாட்டின் முதலாவது திட்டமான "ககன்யான்" என்று அழைக்கப்படும் திட்டத்திற்காக நான்கு விண்வெளி வீரர்கள் தேர்வு செய்யப் பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.
    - 2022 ஆம் ஆண்டில் இந்தியா சுதந்திரம் அடைந்ததன் 75வது ஆண்டுக் கொண்டாட்டங்களுக்கு முன்னர் இஸ்ரோ தனது முதலாவது மனித விண்வெளித் திட்டமான "ககன்யான்" ஏவப்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## உள்ளாட்சி அமைப்புத் தேர்தல் - முதலாவது திருநங்கை வெற்றி

- தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புத் தேர்தல் வரலாற்றில் முதல்முறையாக, எதிர்க்கட்சியான திமுக கட்சியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் திருநங்கை ஒருவர் ஒன்றியக் கவுன்சிலர் பதவிக்கு தேர்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இத்தேர்தலில் நாமக்கல் மாவட்டத்தின் திருச்செங்கோடு நகரில் 30 வயதான ரியா வெற்றி பெற்றுள்ளார்.

# தேசியச் செய்திகள்

## ராபி பயிர் (குறுவைப் பயிர்கள்) விதைப்பு அதிகரித்தல்

- ராபி பயிர்களின் விதைப்புப் பகுதியானது 36 லட்சம் ஹெக்டேர் பரப்பு என்ற அளவில் அதிகரித்துள்ளதாக மத்திய வேளாண் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
- ராபி பயிர்களின் மொத்த விதைப்புப் பகுதியானது கடந்த ஆண்டு 536 ஹெக்டேர் என்ற அளவில் இருந்தது. தற்பொழுது இது 571 ஹெக்டேராக அதிகரித்துள்ளது.
- ராபி பயிர் வளரும் மாநிலங்களில் மண்ணின் ஈரப்பதம் மேம்படுவதே இதற்கு முக்கிய காரணமாகும்.
- இந்தியாவின் முக்கிய ராபி பயிர்கள் கோதுமை, பார்லி, எள், பட்டாணி, கடுகு ஆகியவையாகும்.
- ராபி பயிர்கள் குளிர் காலத்தில் விதைக்கப்பட்டு கோடைக் காலத்தில் அறுவடை செய்யப் படுகின்றன.

## சன்சத் ஆதர்ஷ் கிராம யோஜனா

- மொத்தமுள்ள 790 நாடாளுமன்ற உறுப்பினர்களில், 252 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே சன்சத் ஆதர்ஷ் கிராம யோஜனாவின் 4வது நிலையின் கீழ் கிராமப் பஞ்சாயத்துகளைத் தத்தெடுத்துள்ளனர்.
- இந்தத் திட்டமானது மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகத்தினால் செயல்படுத்தப் படுகின்றது.

- இந்த திட்டமானது 2014 ஆம் ஆண்டு அனுசரிக்கப்பட்ட ஜெயப்பிரகாஷ் நாராயணனின் பிறந்த ஆண்டு விழாவின் போது இந்தியப் பிரதமரால் தொடங்கப் பட்டது.

***இந்தத் திட்டம் பற்றி***

- இது ஒரு கிராம மேம்பாட்டுத் திட்டமாகும். இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் 2019 ஆம் ஆண்டிற்குள் தலா மூன்று கிராமங்கள் மற்றும் 2024 ஆம் ஆண்டிற்குள் மொத்தம் எட்டு கிராமங்கள் ஆகியவற்றின் சமூக - பொருளாதார மற்றும் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் உருவாக்குவதற்கும் பொறுப்பு மிக்கவர்களாவர்.
- முதலாவது ஆதர்ஷ் கிராமமானது (மாதிரிக் கிராமம்) 2016 ஆம் ஆண்டிற்குள் உருவாக்கப்பட வேண்டும். மேலும் இரண்டு கிராமங்கள் 2019 ஆம் ஆண்டிற்குள் உருவாக்கப்பட வேண்டும்.
- 2019 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை, ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் ஒவ்வொரு ஆண்டும் ஒரு கிராமம் என்ற அளவில் மேலும் ஐந்து ஆதர்ஷ் கிராமங்களை உருவாக்க வேண்டும்.

## ஆசிய சிங்கங்கள் - கணக்கெடுப்பு

- ஆசிய சிங்கங்களின் கணக்கெடுப்பானது 2020 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற இருக்கின்றது.
- கிர் தேசியப் பூங்கா மற்றும் சரணாலயம் ஆகியவை அடங்கிய ஆசிய சிங்கங்கள் வாழும் பகுதியில் குஜராத் வனத் துறையானது இந்த சிங்கக் கணக்கெடுப்பை நடத்துகிறது.
- இந்தக் கணக்கெடுப்பானது ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் ஒரு முறை இந்திய வன விலங்கு நிறுவனத்தினால் நடத்தப் படுகின்றது.
- இந்தக் கணக்கெடுப்பை நடத்துவதற்காக அந்நிறுவனம் 10,000 ஒளிப்பட கருவிகளைப் பயன்படுத்த இருக்கின்றது.




***ஆசிய சிங்கம் பற்றி***

- இது பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தின் சிவப்பு தரவுப் பட்டியலின் கீழ் 'ஆபத்தான இனமாகப்' பட்டியலிடப்பட்டுள்ளது.
- இது வனவிலங்கு (பாதுகாப்புச்) சட்டம், 1972ன் அட்டவணை - 1ல் பட்டியலிடப்

பட்டுள்ளது.

- எஞ்சியிருக்கும் ஆசிய சிங்கங்கள் குஜராத்தில் உள்ள கிர் காட்டில் மட்டுமே உள்ளன.
- 2015 ஆம் ஆண்டு சிங்கங்கள் குறித்த கணக்கெடுப்பின் படி, இங்கு 523 ஆசிய சிங்கங்கள் உள்ளன.
- பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தின் சிவப்பு தரவுப் பட்டியலின் கீழ் ஆப்பிரிக்க சிங்கங்கள் "பாதிக்கப்படக் கூடிய" இனமாகப் பட்டியலிடப் பட்டுள்ளன.

***ஆசிய சிங்கங்கள் பாதுகாப்புத் திட்டம்***

- இந்த 3 ஆண்டுத் திட்டமானது (2018/2021) மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சகத்தால் தொடங்கப் பட்டுள்ளது.

## பிரதான் மந்திரி கிசான் திட்டத்தின் கீழ் ரூ. 12,000 கோடி

- 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலான காலகட்டத்திற்கான பிரதான் மந்திரி கிசான் திட்டத்தின் மூன்றாம் தவணைத் தொகையான ரூ. 12,000 கோடி நிதியை மத்திய அரசு விடுவித்துள்ளது.

***பிரதான் மந்திரி கிசான் திட்டம் பற்றி:***

- பிரதான் மந்திரி கிசான் சம்மன் நிதி என்பது இந்திய அரசின் 100% நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் ஒரு மத்திய அரசுத் திட்டமாகும்.
- இது 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் அறிவிக்கப்பட்டது.
- இந்த திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் உள்ள அனைத்து விவசாயக் குடும்பங்களுக்கும் வருமான நிதி உதவியாக ஆண்டுக்கு ரூ. 6000 என்ற அளவில் ஒவ்வொரு நான்கு மாதங்களுக்கு ஒரு முறையாக மூன்று தவணைகளில் (ஒரு தவணை - ரூ 2000) வழங்கப் படுகின்றது.
- இந்தத் திட்டத்தின் பயனாளிகளான விவசாயக் குடும்பங்களை அடையாளம் காண்பதற்கான முழுப் பொறுப்பும் மாநில/ஒன்றியப் பிரதேச அரசாங்கங்களிடமே உள்ளது.
- இந்த திட்டமானது மத்திய வேளாண் மற்றும் விவசாய நல அமைச்சகத்தினால் செயல்படுத்தப் படுகின்றது.

***கிருஷி கர்மான் விருதுகள் பற்றி***

- உணவு தானிய உற்பத்தியில் சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்கு கிருஷி கர்மான் விருதுகள் வழங்கப் படுகின்றன.
- இந்த விருதானது மத்திய வேளாண் மற்றும் விவசாய நல அமைச்சகத்தினால் 2010-11ல் ஏற்படுத்தப் பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## உரிமையியல் வழக்கில் கைது செய்யப்பட்ட கைதிகள் மற்றும் மீனவர்களின் பட்டியல்கள்

- 2020 ஆம் ஆண்டு ஜனவரி 1 அன்று இந்தியாவும் பாகிஸ்தானும் கைதிகள் மற்றும் மீனவர்கள் ஆகியோரின் பட்டியலை பரிமாறிக் கொண்டன.
- இந்த இரு நாடுகள் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 1 மற்றும் ஜூலை 1 ஆகிய தேதிகளில் இது குறித்த தகவல்களைப் பரிமாறிக் கொள்கின்றன.

- அதே நாளில் இந்த இரு நாடுகள் அணுசக்தி நிலையங்கள் குறித்த தகவல்களையும் பரிமாறிக் கொண்டன.
- 2008 ஆம் ஆண்டில், இந்தியாவும் பாகிஸ்தானும் அந்தந்த நாட்டில் உள்ள கைதிகளுக்கு அவர்களது நாட்டுத் தூதரக அணுகலை அனுமதிக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டுள்ளன.

# பொருளாதாரச் செய்திகள்

## பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கு MANI என்ற ஒரு செயலி

- பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்காக MANI என்ற ஒரு செயலியை இந்திய ரிசர்வ் வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.
- MANIன் விரிவாக்கம் கைபேசி உதவியுடன் பண அடையாளங் காட்டி என்பதாகும்.
- பண மதிப்பிழப்பிற்குப் பிறகு புழக்கத்தில் உள்ள புதிய நாணயத் தாள்களை அடையாளம் காண இது உதவுகின்றது.
- இருப்பினும், இந்தச் செயலியானது உண்மையான அல்லது கள்ள நோட்டுகளை கண்டறியாது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## FAME திட்டம்

- கனரகத் தொழில் துறை மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் கனரகத் தொழில் துறையானது ஃபேம் இந்தியா (FAME - Faster Adoption and Manufacturing of (Hybrid) and Electric Vehicles) திட்டத்தின் இரண்டாம் நிலையின் கீழ் 2636 மின்சார வாகன மின்னேற்று நிலையங்களை அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது.
- ஃபேம் இந்தியா என்பது கலப்பு & மின்சார வாகனங்களின் உற்பத்தி மற்றும் அவற்றை துரிதமாக ஏற்றுக் கொள்ளுதல் என்பதாகும்.
- சலுகைகளை வழங்குவதன் மூலம் மின்சார மற்றும் கலப்பின வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.
- மூன்று மின்னேற்றுத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த இந்தியா திட்டமிட்டுள்ளது.
- CHAdeMO அமைப்பு, இந்திய பாரத் தர அமைப்பு மற்றும் ஒருங்கிணைந்த மின்னேற்று அமைப்பு (CCS - Combined Charging System) ஆகிய மூன்றும் இதில் அடங்கும்.
- CHAdeMO என்பது ஒரு விரைவான மின்னேற்று முறையாகும்.
- CCS ஆனது நேர் மின்னோட்டம் மற்றும் மாறுதிசை மின்னோட்டம் ஆகிய இரண்டு மின்னேற்றத்தையும் உள்ளடக்கியுள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## சென்னா ஸ்பெக்டபிலிஸ் (அவரைக் குடும்பம்)

- வயநாடு வனவிலங்குச் சரணாலயம் உட்பட நீலகிரி உயிர்க்கோளச் சரணாலய வனப் பகுதிகளில், சென்னா ஸ்பெக்டபிலிஸின் பரவலான வளர்ச்சியைத் தடுக்க கேரள அரசு திட்டமிட்டுள்ளது.

- இது அமெரிக்காவின் வெப்பமண்டலப் பகுதிகளுக்குச் சொந்தமான ஒரு இலையுதிர் மரமாகும்.
- இது குறுகிய காலத்தில் 15 முதல் 20 மீட்டர் வரை வளரும். இது பூக்கள் பூத்த பிறகு ஆயிரக்கணக்கான விதைகளை வெளியிடுகின்றது.
- இது ஒரு ஆக்கிரமிப்பு இனமாகும்.
- இது பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தின் சிவப்புத் தரவுப் பட்டியலின் கீழ் "குறைந்த கவனம் கொண்ட இனம்" என வகைப்படுத்தப் பட்டுள்ளது.



# மாநிலச் செய்திகள்

## AFSPAன் கீழ் நாகாலாந்து

- 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 30 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் வகையில் ஆயுதப் படை (சிறப்பு அதிகாரங்கள்) சட்டத்தின் (Armed Forces (Special Powers) Act - AFSPA) கீழ் மேலும் 6 மாத காலத்திற்கு நாகாலாந்து மாநிலம் முழுவதையும் 'பாதிக்கப்பட்டப் பகுதியாக' மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

***AFSPA பற்றி***

- ஆயுதப் படைகளின் சிறப்பு அதிகாரச் சட்டமானது (AFSPA) 1958 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது.
- இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் வன்முறை அதிகரிக்கும் சூழலில் இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தது.
- AFSPA ஆனது பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொது ஒழுங்கைப் பராமரிப்பதற்காக பாதுகாப்புப் படையினருக்கு அதிகாரத்தை அளிக்கின்றது.

## சத்தீஸ்கர் - தொழிலாளர்களுக்கான நிதியுதவித் திட்டம்

- சத்தீஸ்கர் மாநில அரசானது 'முக்கியமந்திரி விஸ்வகர்மா நிர்மன் ஷ்ராமிக் மிருத்யு எவம் திவ்யாங் சஹாய்தா யோஜனா' என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இது வேலையின் போது அல்லது மாற்றுத்திறன் காரணமாக இறக்கும் பதிவு செய்யப்பட்ட கட்டுமான மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு நிலையான இழப்பீடு வழங்க முயல்கின்றது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சங்கீத கலாநிதி விருது

- எஸ் சௌமியா (கர்நாடகப் பாடகர்) என்பவருக்கு சங்கீத கலாநிதி விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- சங்கீத கலாநிதி விருதானது சென்னையில் உள்ள மியுசிக் அகாடமி எனும் இசை நிறுவனத்தினால் நிறுவப் பட்டது.
- இது ஒரு கர்நாடக இசைக் கலைஞருக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் ஒரு விருதாகும்.

# இதரச் செய்திகள்

## 2020 - "செவிலியர் மற்றும் பேறுகால உதவியாளர் ஆண்டு"

- உலக சுகாதார அமைப்பானது உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பை அளிப்பதற்காக 2020 ஆம் ஆண்டை "செவிலியர் மற்றும் பேறுகால உதவியாளர் ஆண்டாக" அறிவித்துள்ளது.
- புளோரன்ஸ் நைட்டிங்கேலின் 200வது பிறந்த தினத்தை முன்னிட்டு இந்த ஆண்டு கொண்டாடப் படுகின்றது.
- 2020 ஆம் ஆண்டில் வெளியிடப்படவுள்ள "உலக செவிலியர் அறிக்கையின்" வளர்ச்சிக்கு இந்த அமைப்பு தலைமை தாங்குகின்றது.

### *புளோரன்ஸ் நைட்டிங்கேல்*

- புளோரன்ஸ் நைட்டிங்கேல் என்பவர் 1820 ஆம் ஆண்டில் பிறந்த ஒரு ஆங்கில சமூக சீர்திருத்தவாதி ஆவார்.
- போரின் போது காயமடைந்த வீரர்களுக்கு உதவியதற்காக இவர் "விளக்குடன் உள்ள ஒரு பெண்" என்று அழைக்கப்பட்டார்.
- மேலும், இவரது நினைவாக ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச செவிலியர் தினமானது மே 12 ஆம் தேதியன்று சர்வதேச செவிலியர் ஆணையத்தினால் கொண்டாடப் படுகின்றது.






★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★